2025 ஆகஸ்ட் மாதம் 19 – ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

O.S. நெம்பர் : 201 /2022

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 – ஆம் தேதி செவ்வாய்கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1–வது நபரின் வாக்குமூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பென்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | அம்சராணி |
| கணவர் பெயர்: | குருசாமி |
| ஊர்: | ஜமீன் ஆலமரத்துப்பட்டி |
| வட்டம்: | அரவக்குறிச்சி |
| மாவட்டம்: | கரூர் |
| தொழில்: | இல்லத்தரசி |
| வயது : | 62 |

19.08.2025

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**முதல் விசாரணை**–

நான் இந்த வழக்கில் வாதியாவேன். வழக்கு விபரங்கள் குறித்து நிருபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன் அவற்றை வாதி தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டி பிரார்த்திக்கிறேன்.

| | |
|---|---|
| 1. | 16.03.2005ம் தேதியிட்டு எனது தகப்பனார் வி.வெங்கடசாமி அவர்கள் பார்த்தசாரதி வகையறாவுடன் செய்துக்கொண்ட பதிவு பாகப்பிரிவினைப் பத்திரம் சார்பதிவாளர் நகல் (ஆவண எண்.1835/2005) – **வா.சா.ஆ.1** |

| | |
|---|---|
| 2. | 29.06.2010 ம் தேதியிட்டு எனக்கு எனது தகப்பனார் வி.வெங்கடசாமி அவர்கள் தாவா சொத்துக்களைப் பொறுத்து எனக்குப் பாத்தியப்படுத்தி எழுதிக்கொடுத்த பதிவு தானசெட்டில்மென்ட் பத்திரம் சார்பதிவாளர் நகல் (ஆவண எண்.9399/2010) – **வா.சா.ஆ.2** |
| 3. | 17.01.2014 ம் தேதியிட்டு எனது தகப்பனார் வி.வெங்கடசாமி நாயக்கர் எனக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மென்ட் ஆவணத்தை ரத்து செய்ததற்கான பதிவு தானசெட்டில்மென்ட் ரத்து ஆவணம் சார்பதிவாளர் நகல் (ஆவண எண்.237/2014) – **வா.சா.ஆ.3** |
| 4. | 02.07.2022 ம் தேதியிட்டு நான் 1ம் பிரதிவாதிக்கும், பி.சி.பட்டி காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர்களுக்கு நான் எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல், மூன்று அஞ்சலக இரசீதுகள் மற்றும் மூன்று அஞ்சலக ஒப்புதல் அட்டைகளுடன் – **வா.சா.ஆ.4** |
| 5. | 12.07.2022 ம் தேதியிட்டு 1ம் பிரதிவாதி அவரின் வழக்கறிஞர் மூலம் எனது வழக்கறிஞருக்கு அனுப்பிய அறிவிப்பு அசல் – **வா.சா.ஆ.5** |

நான் பிராதில் கோரியவாறு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**:– 1, 2 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 19.08.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.08.19 18:31:17 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
19.08.2025.